# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2032 - 2017 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2017.08.11

*2032 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1394* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | *1394* |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1397* |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1403* |
| ஏல விற்பனைகள் | *1404* |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017,ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

**இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 60 எண்ணிக்கையான, 10 தொன் கொள்ளளவுடைய Track Jacks களின் வழங்கலுக்கான பெறுகை**

( Ratchet Type & Pinion Manually Operated)

1. 60 எண்ணிக்கையான 10 தொன் கொள்ளளவுடைய Track Jacks களின் ( Ratchet Type & Pinion Manually Operated) பெறுகைக்காக, உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, இலங்கைப் புகையிரத சேவைகளின் திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டத்திலானது) தலைவர் பொறுப்பேற்பார்.

2. விலைமனுக்கள் 2017.08.30 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு (இலங்கை நேரம் ) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாகிய 3,500 ரூபா மட்டும் அல்லது அதற்குச் சமமான இலகுவாக பணமாக மாற்றக்கூடிய நாணயத்திலான தொகையொன்று, செலுத்தப்பட்டு, இலங்கை, கொழும்பு 10,ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடு களிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே 2017.08.29 ஆந் திகதியன்று பி.ப.3.00 மணி (இலங்கை நேரம்) வரை விலைமனுக்கள் சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.

4. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமுள்ள பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

5. முத்திரைபொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவே கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டத்திலானது),
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
த.பெ.இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

6. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பார்வையிட லாம்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள் .

குறியீட்டு இல. SRS/F.7503.

8-479

---

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

எனது இல. : 01/12/T/2018 நீர்கொழும்பு.

**நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை — 2018**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக தொகை மற்றும் சில்லறைக்கு கீழ்வரும் கள்ளுத் தவறணை 2018, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2018, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின்கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2017.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணை விலைமனு மூலம் பெற எதிர்பார்ப்பவர்கள் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணமாக நிரப்பி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் அதற்குரிய உறுதியின் பிரதியையும் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி கீழே குறிப்பிட்டுள்ள அத்தவறணைக்குரிய கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர் கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2017.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

6. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத கள்ளுத் தவறணை 2017.11.22 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும்/மாதத்திற்கான குத்தகை முதலில் இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

8. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

9. இவ்விற்பனை தொடர்பாக எனது முடிவே இறுதியாகும்.

ஏ. கே. ஆர். அலவத்த,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2017, யூலை 28.

**அட்டவணை**

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல. 10 – செத்தப்பாடுவ | நீர்கொழும்பு | செத்தப்பாடுவ ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 2. இல. 11 – பசியாவத்தை | நீர்கொழும்பு | பசியாவத்த ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 3. இல. 12 – பிட்டிபனை | நீர்கொழும்பு | பிட்டிபனை ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 4. இல. 15 – குரண | நீர்கொழும்பு | குரண ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 5. இல. 16 – காமாச்சிஓடை | நீர்கொழும்பு | காமாச்சிஓடை ஊர் மட்டும் | மு. ப. 11. 00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 6. இல. 17 – உடையார்தோப்பு | நீர்கொழும்பு | உடையார் தோப்பு ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 7. இல. 18 – குடாபாடுவ | நீர்கொழும்பு | குடாபாடுவ ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,000 | 2017.09.21 மு. ப. 10.30 |

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 8. இல. 19 - தளுபத்த | நீர்கொழும்பு | தலுபத்த ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 9. இல. 20 - போருதொட்ட | நீர்கொழும்பு | போருதொட்ட ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 10. இல. 21 - பலங்கதுர | நீர்கொழும்பு | பலங்கதுர ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2017.09.21 மு. ப. 10.30 |
| 11. இல. 22 - கொச்சிக்கடை | நீர்கொழும்பு | கொச்சிக்கடை ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,500 | 2017.09.21 மு. ப. 10.30 |

8-449

---

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2017/2018

கீழ்த் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 2018, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2017.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப்பத்திரத்துடன் பொறிக்கப்பட்டதும் இடது பக்க மேல் மூலையில் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் போடவோ அல்லது கட்டான பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்பவோ வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது கையொப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2017.09.22 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் கட்டான பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் 2017.11.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்குக் குறையாது தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக கட்டானை பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கையொப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டானை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

பிரதேச செயலகம்,
தெமங்ஹந்திய,
கட்டானை.
2017, யூலை 25.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | முக்கலன்கமுவை இல. 13 | கட்டானை | முக்கலன்கமுவை கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2017.09.22 மு.ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2017.09.22 மு.ப. 10.30 |
| 3. | ஏத்கால இல. 13 | கட்டானை | ஏத்கால கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 500 | 2017.09.22 மு.ப. 10.30 |
| 4. | கிழக்கு கட்டான இல. 24 | கட்டானை | கிழக்கு கட்டான கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2017.09.22 மு.ப. 10.30 |
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டானை | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2017.09.22 மு.ப. 10.30 |
| 6. | பம்புக்குளி இல. 26 | கட்டானை | பம்புக்குளி கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 1,000 | 2017.09.22 மு.ப. 10.30 |

8-402

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : திதஸ் அரண ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 122949
பதிவு முகவரி : இல. 23 ஆம் மைல் போஸ்ட், பெந்திவெவ, ஜெயந்திபுர, பொலநறுவை

8- 49

## லங்வா சிமெண்ட் கோபரேஷன் ( பிறைவேட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

லங்கா சிமெண்ட் கோபரேசன் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி பீவீ 122564 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இல. 25, ஆல்பிரட் பிளேஸ்,

கொழும்பு 00300 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
என் அன்ட் என் ஏஜென்ஸ்
அன்ட் செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம்,
(5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

8- 253

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2017.07.07 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ஜப்பான் எலைஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 123665
பதிவு முகவரி : இல.183A, கொட்டா ரோட், கொழும்பு 8

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

8-298

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2017.07.13 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ஜலன்ட் புரசஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 123790
பதிவு முகவரி : இல.47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

8-299

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2017.07.07 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: யுவர் ஓஷன் ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 123691
பதிவு முகவரி : இல.47,அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

8-300

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ரஷியன் ஸ்பீகிங் டுவரிஸ்ட் கயிட்ஸ் லெக்சரர்ஸ் எசோசியேஷன்

பதிவிலக்கம் : ஜீஏ 3207
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.06.16
பதிவு முகவரி : ஶ்ரீ சாரிபுத்தாராமய, மாதா வீதி, நாரஹேன்பிட்டிய

கம்பனிச் செயலாளர்.

8- 305

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: இயிகன் வோடர்ப்ரூபிங் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123467
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.06.29
பதிவு முகவரி : 165, சமர்சைட் கார்டர்ன்ஸ், கல்வறுசாவ வீதி, ஒருவல, அத்துருகிரிய

செயலாளர்.

8- 306

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் பெயர்: பெக் பெக்கர்ஸ் பெர்னடஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123886
பதிவு முகவரி : 3/2, ஏ, கின்ஸி வீதி, கொழும்பு 8

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச்டிபி பிஸ்னஸ் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

8-308

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் கம்பனியின் கூட்டிணைப்பு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் பெயர்: றோஸ் கார்டன் பாம் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 120127
பதிவு முகவரி : இல. 95/16, மோதர பாதை, கொழும்பு 15

கம்பனிச் செயலாளர்.

8-367

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை கூட்டிணைத்தல்.-*

கம்பனியின் பெயர்: சொரபொர விலேஜ் ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 123437
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.06.28

கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 40/1, தெவெனி ஜசிங்க மாவத்தை, கண்டி, இலங்கை

திருமதி டீ.ஜீ.புன்ச்சிஹேவா,
கம்பனிச் செயலாளர்.

8-392

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை கூட்டிணைத்தல்.-*

கம்பனியின் பெயர்: லங்கா பீச் டிஸ்ரிபியுடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 123589
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.04

கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 84/1, பலங்கத்துறை கிழக்கு, கொச்சிக்கடை

கம்பனிச் செயலாளர்: திரு. டப்.ரீ.எச். எம். பர்னாண்டோ.

8-393

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை கூட்டிணைத்தல்.-*

கம்பனியின் பெயர்: லங்கா நொன் - வோவன் பெக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 123532
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.03

கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: தம்புளு ஓயா, தம்புள்ள, இலங்கை

கம்பனிச் செயலாளர்: திருமதி எஸ். எம். பீ.பீ. சிறிவர்தன, சட்டத்தரணி.

8-394

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(8) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் முன்னைய பெயர் : ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர் : ஒபெக்ஸ் எக்ரின் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவு முகவரி :* இல. 74, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2017.04.06
*பதிவிலக்கம் :* பீவீ 12839

கம்பனிச் செயலாளர்.

8- 423

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* டபிள்யூ. எஸ். ஆர். என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம் :* பீவீ 123732
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017.07.17
*பதிவு முகவரி :* ஹொரண வீதி, உடோவிட்ட, நேபொட

KY எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

8-441

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர் :* ட்ரீம்ஸ் நர்சரி அன்ட் நெஸ்ட் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம் :* பீவீ 104476
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2015, மாச்சு 16
*பதிவு அலுவலகம் :* 'சனசும', முதல்வத்த வீதி, கடுகண்ணாவ

கம்பனிச் செயலாளர்.

8-457

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சதன் கிறடிட் அன்ட் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017, யூலை மாதம் 20 ஆம் திகதி
*கம்பனி இல. :* பீபி 5404
*பதிவு அலுவலக முகவரி:* இல. 200/2, வக்வெல்ல வீதி, காலி

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-465

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சொப்ட் லைன் இன்ஜினியரிங் சொலுயுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017, யூலை மாதம் 21 ஆம் திகதி
*கம்பனி இல. :* பீவீ 124075
*பதிவு அலுவலகம் :* இல. 492/பி, அல்பராவ குறுக்குத் தெரு, அல்பராவ, தலஹேன, மாலபே

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-466

---

## அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், சொப்ட்லயின் குளோபல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் எனும் கம்பனி 2017, யூலை 05 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது பற்றிய அறிவித்தல் தரப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சொப்ட்லயின் குளோபல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017.07.05
*கம்பனியின் இல. :* பீவீ 123627
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல.492/பி, ஹல்பரவ க்ரொஸ் வீதி, ஹல்பரவ, தலஹென்ன, மாலபே

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-467

## அறிவித்தல்

கம்பனி பதிவு செய்யப்பட்டதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவு செய்யப்பட்டதற்கான அறிவித்தல்.-*

கம்பனியின் பெயர் : டபிள்யூ. ஏ.எம். இக்குயூப்மென்ட் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவு இலக்கம்: பீவீ 123905

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 61, ப்ளவர் வீதி, கொழும்பு 7

மேற்படி கம்பனி சபை சார்பில்,

எம். ஏ. ஆர். பெரேரா,
கம்பனிச் செயலாளர்.

8- 471

---

## அறிவித்தல்

கம்பனி பதிவு செய்யப்பட்டதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவு செய்யப்பட்டதற்கான அறிவித்தல்.-*

கம்பனியின் பெயர் : சினோ லிங்க்ஸ் கன்சல்டன்சி லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனியின் இலக்கம்: பீவீ 122610

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல.70, 2/1, 2 ஆவது மாடி, லக்கி பிளாஸா, கொழும்பு 3

பணிப்பாளர்கள்.

8- 472

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள ஏரிக்கரை வீதி, ஆரையம்பதி- 01, மட்டக்களப்பு, தற்காலம் 201-26 Thorncliffe Pk Dr. Toronto, On, Canada திருமதி சிவப்பிரியா பாலேந்திரா, காசிப்பிள்ளை பாலேந்திரா ஆகிய நாங்கள், P. KAYILAS ANATHAN Barrister and Solicitor, 2401 Eglinton Avenue East 302, Scarborough, ONMIK 2M5, CANADA ஆல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.03.11 ஆம் திகதிய விசேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தில் ஏரிக்கரை வீதி, ஆரையம்பதி - 01 , மட்டக்களப்பு நல்லதம்பி பாக்கியராஜா ( தே.அ.அ.இல. 400501661V) வை அற்றோணித்தத்துவக்காரராக நியமித் திருந்தேன். இது A.R.G. Office Eastern Zone இல் 19 ஆம் புத்தகத்தில் 23 ஆம் பக்கத்தில் 117 ஆம் தொடரிலக்கத்தில் 2016.04.26 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. இவ் அற்றோணித்தத்துவப் பத்திரம் இதனால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறது என்பதை நான் பொது மக்களுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கிறேன். மேலே குறிப்பிட்ட அற்றோணித்தத்துவக்காரராகிய நல்லதம்பி பாக்கியராஜா அவர்களால் கீழ்க் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும், கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாங்கள் பொறுப்பாக மாட்டோம் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

சிவப்பிரியா பாலேந்திரா, காசிப்பிள்ளை பாலேந்திரா.

8-266

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 40, சம்போதி மாவத்தை, பள்ளிமுள்ள, மாத்தறை என்ற முகவரியில் வசிக்கும் செல்டன் ஹக்மனகே ஆகிய என்னால் லீலா ஹம்மனகே அல்லது சீலவதி பரணவிதான அல்லது லீலாவதி பரணவிதானகே என்பவருக்கு வழங்கப்பட்டதும் திஸ்ஸ திஸாநாயக்க பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 14092 என்ற இலக்கத்தையும் 1991.04.12 என்ற திகதியும் கொண்ட அற்றோணித்தத்துவமானது 2016.11.16 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதென்பதனை அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இத்தினத்திலிருந்து அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

8- 282

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 130 /ஈ, வீதியவத்தை, உடகம்பொள, கம்பஹா என்ற முகவரியில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 656430141V) சம்பா சேபாலிகா மல்லவ ஆரச்சி ஆகிய நான், என்னால் இல. பீ 50/ஜீ4, மாளிகாவத்தை மாடிவீடு ,கொழும்பு 10 என்ற முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு திருமதி என்.எச். குமுதினி பொன்சேகா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 389 ஆம் இலக்கமுடையதுமான, தே.அ.அ. இல. 562794107V ஐ உடைய பாலனகே லக்ஷ்மன் முதுகுமாரன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சி. எஸ். மல்லவஆரச்சி.

8-303

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அலுபோமுள்ள, அருக்கொட ஸ்ரீ இந்திரசார மாவத்தையில் வதியும் துடுவகே லலித் பெரேரா விஜேசேகர ஆகிய நான், பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஏ. ஜயந்த பெரேராவினால்

2005, மாச்சு 23 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1888 ஆம் இலக்கம் கொண்ட பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 300 தொகுதியில் 68 ஆம் பக்கத்தில் 6019 ஆம் நாளேட்டு இலக்கத்தின் கீழ், 2005, மே மாதம் 13 ஆம் திகதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது அற்றோணித் தத்துவதாரராக அலுபோமுள்ள, அருக்கொட ஸ்ரீ இந்திரசார மாவத்தையில் வதியும் துடுவகே வனிதா பெரேரா விஜேசேகர என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இன்று தொடக்கம் அது இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

துடுவகே லலித் பெரேரா விஜேசேகர.

8-391

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

விதாரந்தெனிய, பெதிகமவில் வசிக்கும் ஹேவாசியாசிங்ஹ பொல்கஹ முல்லகே பேபிஹாமி, இலக்கம் 99, கங்கேயாய, எம்பிலிப்பிட்டியவில் வசிக்கும் (தே.அ.அ.இல. 435171028V) ஹேவாசியாசிங்ஹ பொல்கஹமுல்லகே பிங்ஹாமி என்றழைக்கப்படும் ஹீன்ஹாமினே அதே முகவரியில் வசிக்கும் ஹேவாசியாசிங்ஹ பொல்கஹமுல்லகே எமலிஹாமி லெல்லொபிட்டிய, கந்தஉட, பண்டாரஹேனவில் வசிக்கும் (தே.அ.அ.இல. 506213487V) ஹேவாசியாசிங்ஹ பொல்கஹ முல்லகே அமராவதீ ஆகிய எம்மால், ஹக்மன, தெனகம மேற்கு நாமல் இல் வசிக்கும் தே.அ.அ.இல. 517930903V) ஹேவாசியாசிங்ஹ பொல்கஹமுல்லகே கிமாரஹாமி என்பவருக்கு வழங்கப்பட்டதும்,

ஹக்மன பிரசித்த நொத்தாரிசு திரு. தர்ஸ்டன் சமர குணரத்ன என்பவரினால் 2016.11.28 ஆம் திகதியன்று 842 என்ற இலக்கத்தின் கீழ் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான விஷேட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக் கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற் கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

எச்.எஸ்.பி.பேபிஹாமி,எச்.எஸ்.பி. அமராவதி,
எச்.எஸ்.பி. ஹீங்ஹாமி அல்லது
ஹீன்ஹாமினே , எச்.எஸ்.பி. எமலிஹாமி.

8-431

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொலன்நறுவை, புலஸ்திகம, பீ.ஓ.பி 313 காலிங்க எலவில் வதியும் வகும்புரயலாகே சீதா ரணசிங்க ஆகிய நான், என்.ஏ. ரூபிகா தமயன்தி பிரசித்த நொத்தாரிசினால் 2016.08.01 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்திய 73 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் ரபேவ, சியம்பலாவ, பன்சல வீதியில் வதியும் திரு. நன்தசேனகே சந்திமால் ஜானக நன்தசேனவிற்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

8-450

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் சிலாபம், குருநாகல் வீதி, இல. 89/4 ஐச் சேர்ந்த மிஹிந்துகுலசூரிய ஹென் கிசந்தா பெர்னாந்து ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு A.W. சாதிகுல் அமீன் அத்தாட்சிப்படுத்தியதும் இல. 89/4 , குருநாகல் வீதி, சிலாபம் எனும் முகவரியைச் சேர்ந்த தல்பதோரகே இம்மானுவேல் லசந்த என்பவருக்கு வழங்கப்பட்டதுமான 2002.10.09 ஆந் திகதி கொண்ட 628ஆம் இலக்க பொது அற்றோணித்தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வறிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

எம். ஏ. கிசந்தா பெர்னாந்து.

2017, யூலை 17.

8- 473

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 7(5)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : லீடர் இலக்ட்ரோனிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 122624
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.05.26
பதிவு முகவரி : இல.12, வஜிர வீதி, கொழும்பு 04

சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர்.

8- 329

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் பின்வரும்கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ள தென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஆனந்தாஸ் டெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 123324
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.06.23
பதிவு முகவரி : இல.120 , 3 ஆம் குறுக்கு வீதி, கொழும்பு 11

சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர்.

8- 324

## அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

எனது இல. : 01/12/T/2018/நீர்கொழும்பு.

### நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெளிநாட்டு மதுபான தவறணை விற்பனை - 2018

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக தொகையாக மற்றும் சில்லறைக்கு கீழ்வரும் வெளிநாட்டு மதுபானம் 2018, தை மாதம் 1ஆந் திகதி முதல் 2018, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின்கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2017.09.21ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. வெளிநாட்டு மதுபானத்தை விலைமனு மூலம் பெற எதிர்பார்ப்பவர்கள் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனுக் கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணமாக நிரப்பி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், வெளிநாட்டு மதுபான விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் அதற்குரிய உறுதியின் பிரதியையும் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதிக் கீழே குறிப்பிட்டுள்ள அதற்குரிய கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர் கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2017.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

6. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத வெளிநாட்டு மதுபானசாலை விற்பனை 2017.11.22ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகை தொகையில் இரு மடங்கிற்கு குறையாத தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

8. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

9. இவ்விற்பனை தொடர்பாக எனது முடிவே இறுதியாகும்.

ஏ. கே. ஆர். அலவத்த,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2017, யூலை 28.

*அட்டவணை*

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல.02 - கிறீன்பார் (வெளிநாட்டு மதுபான சாலை) | நீர்கொழும்பு | குண்டன்வில மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2017.09.21 மு. ப. 10.30 |

*8-448*

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீஎல்சீ - ஜா-எல கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### ஏல விற்பனை

"கடன்பட்டோர் என்ற வகையில் ஜா-எலயைச் சேர்ந்த பாலசூரிய அபுகாமிலாகே மேரி பிரசீற்றா பெரேரா என்பவருக்காக ஜா-எல பதிவு அலுவலகத்தில் இல. என். (பிவிஎஸ்) 31451 இல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய ஏன்ஜல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் பதிவுப் பிரிவுக்குட்பட்ட அளுத்கோரள ராகம்பத்துவில் நகரசபை எல்லைக்குட்பட்ட பிரிவில் வெலிகம்பிட்டியவில் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 50, 50/1 மற்றும் 50/A இல் அமைந்துள்ள "ஹல்கஹாகும்புர" என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு A அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்டு 2000.07.25 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 6507 இல் துண்டு A எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் முப்பத்தெட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்.(0ஏ.0றூ.38.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை நான் 2017, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** ஜா-எலவிலிருந்து கொழும்பு நீர்கொழும்பு வீதி மார்க்கமாக கொழும்பு நோக்கி வருகையில் வெலிகம்பிட்டியவுக்கு 1 கி.மீ. இற்கு முன் வேவல சேர்ச் வீதியில் திரும்பி சுமார் 150 மீற்றர் தூரத்திற்குச் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலப்பக்கமாக வீதியில் அருகில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** தயவு செய்து 2014.11.21ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், மற்றும் 2014.11.07ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகை களையும் 2014.10.30 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்கும் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரிகள் ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5%;

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90 % விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்;

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து ஆதனத்தை மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர்-(சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்னும் விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456475, 011- 2456480.

" மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 2572940

8- 388

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

மொரட்டுவக் கிளை

**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**1 ஆம் அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, சல்பிட்டி கோரளையில் மொரட்டுவ மாநகர சபை பிரிவில் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 553, மொரட்டுவெல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் திகரொல்ல கிராமத்தில் கட்டிடம் இலக்கம் 79/2 , சென் பீட்டர் ரோட்டில் அமைந்துள்ள காட்டகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் எல்.பி. லியனகேவின் 2015.03.27 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1199A இல் காண்பிக் கப்பட்ட லொட் A.**

**இக்காணியின் விஸ்தீரணம்**

**(0ஏ.0றூ.17.84 பேர்.)**

**இக்காணியில் உள்ள கட்டிடம், மரங்கள் எல்லாம் சேர்த்து**

**இக்கீழ் விபரிக்கப்பட்ட காணிகள் ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடனும்**

**1. மேற்படி திகரொல்ல கிராமத்தில் உள்ள காட்டகாவத்த மற்றும் பல்மயிரா ஹவுஸ் என்று சொல்லப்பட்ட காணியின் நிலஅளவையாளர் ஜே. வில்பிரி ரொத்திரிகோவின் 1998.02.05 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1759 இல் காண்பிக்கப்பட்ட லொட்ஸ் 8,11,12,15 மற்றும் 16. இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.17.5பே.**

**2. மேற்படி திகரொல்ல கிராமத்தில் உள்ள காட்டகாவத்த மற்றும் பல்மயிரா ஹவுஸ் என்று சொல்லப்பட்ட காணியின் நிலஅளவையாளர் எம். டி. ரத்நாயக்கவின் 2001.07.18 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1850 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 . இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.0.62பே.**

**2 ஆம் அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து, சல்பிட்டி கோரளையில் மொரட்டுவ மாநகர சபை எல்லையில் மொரட்டுவ பிரதேச செயலாளர் எல்லையில் இலக்கம் 552A, உயன தெற்கு, கிராம அலுவலர் தொகுதியில் உயன கிராமத்தில் மொரட்டுவ உயன ரோட் கட்டிட இலக்கம் 90/5இல் அமைந்துள்ள மோதரபொல மாதன்காவத்த ஏத்துகாவத்த, மாபொலவத்த அல்லது மாபொல மாதன்காவத்த மற்றும் மாதனகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் எல். பி. லியனகேவின் 2013.05.22 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 704 இல் காண்பிக்கப்பட்ட லொட் A. இக்காணியின் (விஸ்தீரணம் 0ஏ.0றூ.12.10பே.) இக்காணியிலுள்ள கட்டிடம், மரங்கள் எல்லாம் சேர்த்து.**

**இக்கீழ் விபரிக்கப்பட்ட காணிகளின் ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடனும்**

**1. மேற்படி உயன கிராமத்தில் உள்ள மோதரபொல, மாதன்காவத்த, ஈத்துகாவத்த, மாபொலவத்த அல்லது மாபொல மாதன்காவத்த மற்றும் மாதன்காவத்த காணியின் நிலஅளவையாளர் எல்.பி. லியனகேவின் 2013.05.22 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 704 இல் காண்பிக்கப்பட்ட லொட் B இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.0.90 பே., அல்லது 0.0023ஹெக்டேயார்.**

**2. மேற்படி திகரொல்ல கிராமத்தில் காட்டகாவத்த மற்றும் பல்மயிரா அவுஸ் என்று சொல்லப்பட்ட நிலஅளவையாளர் எஸ். லியனகேவின் 1987.12.20 ஆந் திகதி மற்றும் நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. எல். டி. சில்வாவின் 1959.09.20 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 6679 இல் காண்பிக்கப்பட்ட லொட் F.இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.12.00 பே.) அல்லது 0.03035 ஹெக்டேயார்.**

**கடன் எடுத்த பாணந்துறை பல்லியமுல்ல சிரினிவாசாரமா ரோட் கட்டிடம் இலக்கம் 267/11B என்ற பதிவு முகவரியில் இலங்கை கம்பனிச் சட்டப்படி அமைக்கப்பட்ட இசுறு டிரெவல்ஸ் மற்றும் டிவலர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் காணியை ஈடு வைத்த சுவன்த ஆராச்சிகே சனத் குமார மேற்படி காணிகளை 1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணையில் சொல்லப்பட்ட காணிகளான 1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணையில் சொல்லப்பட்ட காணிகளை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.**

**மேல் சொல்லப்பட்ட 1 ஆவது அட்டவணை (0ஏ.0றூ.17.84 பேர்.) காணியை என்னால் 2017, ஒகத்து 31ஆந் திகதி காலை 11.30 மணிக்கும்**

**2 ஆவது அட்டவணை (0ஏ.0றூ.12.10 பேர்.) காணியை என்னால் 2017, ஒகத்து 31ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கும் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2017.07.07ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "லக்பிம",

''த ஜலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2017.08.11 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2017.08.11 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஜலன்ட்" மற்றும் "வீரகேசரி "ஆகிய பத்திரிகைக ளையும் பார்க்கவும்.

***1 ஆவது அட்டவணை காணி - ஆதனத்திற்கு செல்லும் விதம்.-***

கொழும்பில் இருந்து காலி ரோட்டில் 18.5 கி.மீற்றர் குருச சந்தி மொரட்டுவ சென்று இடது பக்கம் திரும்பி பிரதான ரோட்டில் 1.00 கி. மீற்றர் தியகொரல்ல பாலம் வரை சென்று மோதர ரோட்டில் (சென். பீற்றர்ஸ் ரோட்) 400 மீற்றர் சென்று பின்பு ஜன ஜய வித்தியாலய பெயர்ப்பலகையைக் காண முடியும். இங்கிருந்து இடது பக்கம் திரும்பி 100 மீற்றர் சென்ற பின்னர் இக்காணியைக் காண முடியும்.

***2வது அட்டவணை காணி***

கொழும்பிலி இருந்து ஒரு 17.5 கி.மீட்டர் ராவத்தவத்த சந்திவரை சென்று வலது பக்கம் திரும்பி லுனாவ ஸ்டேசன் ரோட்டில் ஒரு 1 கி.மீட்டர் சென்று இடதுபக்கம் உள்ள உயன ரோட்டில் ஒரு 400 மீட்டர் சென்ற பிறகு வலது பக்கம் திரும்ப காணி உள்ளது. கேட்டில் இலக்கம்: 106/23 ஐக் காணமுடியும்.

***கட்டணங்கள் செலுத்தும் விதம்.***- உத்தேசக் கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏல விற்பனைக்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ( VAT )

கொள்வனவு விலையின் மிகுதி 90% கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது மொரட்டுவக் கிளையில் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

***வேறு விபரங்களுக்காக.-***

முகாமையாளர்,
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ,
இல. 766 , காலி வீதி, இடம,
மொரட்டுவ.
தொலைபேசி இல. : 011- 2643084-6, 011- 5555331.
தொலைநகல் இல. : 011- 2643087.

எல். பீ. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

8-455

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

டீ.எம்.சீ.என்.சீ.திசாநாயக்க
கணக்கு இல. 0113 5000 2997

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினால் 2017.04.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2017.06.23ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2017.06.19 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்"(Island), ''தினக்குரல் '' (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து தொண்ணூற்றி ஒன்பது ரூபா (ரூபா 1,48, 64, 099.00) 2017,ஏப்பிறல் 12 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒன்பது ரூபா முப்பத்தி நான்கு சதம் (ரூபா 1, 23,85,679. 34) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து வீதம் (10%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் அட்டவணை யில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2017.08.29 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றேன்.

***அட்டவணை***

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மாஹாபலாத்த கோரலே பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் அம்பேகொடை 67 - C ஐ ஏற்ற கிராம அலுவலர் பிரிவின் மெட்டிபீம்பிய கிராமத்தில் அமைந்த "WYE எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு (அந் நில அளவையாளரினால் 2014, மே 02 ஆந் திகதி மீள் அளவீடு செய்யப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது) உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டப்லியூ. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, சனவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 969 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : V C வீதி; கிழக்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி (இல.566 எனும் வரைபடத்தின் லொட் 1); தெற்கு: கந்தூர ; மற்றும் மேற்கு : கந்தூர ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.026

ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 969 எனும் வரைபடத்திற்கு அமைவாக பதுளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் V 06/112 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்.

8- 463

---

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்), கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் , சல்பிட்டி கோறளை , பள்ளேபற்று , வட்டார இல. 23- ஹுணுப்பிட்டி, கொம்பனி வீதியில் அமைந்துள்ளதும் வொக்ஸோல் தெரு, வரிமதிப்பு இல. 273/5 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கல்லகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1991, மாச்சு 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 10/91 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ.டீ.எம்.ஜே. ரூப்பசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1985.01.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 394 (சீஎச்/ஓ/202/3953) இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்ட அதுவேவான காணியின் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான காணியினது ) ஏலவிற்பனை**

**( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ . 5.94பே )**

*(கடப்பாடுடையவரான /ஈடுவைத்தவரான ஐ.பீ.சீ. இன்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஆர். எல்.சீ. ரணசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 388 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ.எஸ்.என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, யூலை 05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5026 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளனர்) .*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**-ஹைட் பார்க் கோனர் சந்தியிலிருந்து வொக்ஷோல் வீதி வழியே எய்ட்கன் கோபுரத்தை கடந்து மேலும் 200 மீற்றர் சென்று வலப்பக்கம் திரும்பி, இடப்பக்கத்திலுள்ள விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு சில மீற்றர்கள் செல்லவும்.

பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2017, ஓகத்து 28 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2017.07.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.08.03 ஆந் திகதிய ''த ஐலன்ட்'', 2017.08.04 ஆந் திகதிய ''லக்பிம'' மற்றும் 2017.08.03 ஆந் திகதிய ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபைக் கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விளம்பரச் செலவுக் கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் 3,000 ரூபா;

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் '' கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் - அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667218/011-2565573.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 011-3068185
தொலைநகல் இல. : 011-2572940

8-482